**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 73/2020 | Village | : | |
| Prosecution witness | : | PW- 23 | Taluk | : | |
| Name | : | திரு. சிவக்குமார் | Occupation | : | |
| Father Name | : | திரு. துரைபாண்டி | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 14.08.2025**

A2, 3,9 absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது அறிவியல் அலுவலராக தடய அறிவியல் துறை சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 9.8.2019 அன்று அறிவியல் அலுவலராக வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தஞ்சாவூரில் பணியில் இருந்தபோது தலைமை காவலர் 1180 திரு. சண்முகசுந்தரம் என்பவர் மூலமாக சரியாக மூடி முத்திரையிடபட்ட தடய பொருட்களை நீதித்துறை நடுவர் திருவையாறு அவர்களிடமிருந்து பெறபட்டது. அதற்கான ஆய்வக எண் TAN/BIOL/131/2019 வழங்கபட்டது. மேற்கண்ட தடயபொருட்களை பிரித்து பார்க்கும்போது அவை பின்வருமாறு

1) கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய பழுப்பு நிற உலோகத்தால் ஆன ட்ரான்ஸ்பார்மர் கைப்பிடி ஒன்று அதன் நீளம் 62 செமீ ஆகும்.

2) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கருப்பு நிற ஜீன்ஸ் ட்ராவ்சர் ஒன்று

3) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கருப்பு நிற அண்டர்வையர் ஒன்று

4) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த மற்றும் கசங்கிய கருப்பு நிற பனியன் ஒன்று

5) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த மற்றும் கசங்கிய வெளுத்த பச்சை நிற முழுக்கை சட்டை ஒன்று

6) 20 செமீ நீளமுள்ள கருப்பு நிற மணிகட்டில் கட்டும் ரப்பர் பேண்ட் அதில் வெள்ளை நிற அச்சடிக்கபட்ட எழுத்துக்கள் Thala Ajith

7) மணிகட்டில் கட்டக்கூடிய புனித சிவப்பு நிற நூல் துண்டுகள் இரண்டு

8) மணிகட்டில் கட்டக்கூடிய புனித கருப்பு நிற நூல் துண்டுஒன்று

9) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த பச்சை நிற டவல் ஒன்று அதில் கருப்பு மற்றும் வெள்ளை நிற குறுக்கு கோடு போடபட்டிருந்து மற்றும் அதில் ஒரு பக்கம் முடிச்சு போடபட்டிருந்தது.

10) வெள்ளை நிற உலோகத்தால் ஆன மோதிரம் ஒன்று

11) மஞ்சள் நிற உலோகத்தால் ஆன மோதிரம் ஒன்று

12) கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய சிறிய கற்கள் மற்றும் சிற்பிகள் கலந்த மண் சிறிதளவு

13) சிறிய கற்கள் மற்றும் சிற்பிகள் கலந்த மண் சிறிதளவு

மேற்கண்ட அயிட்டம் 1 முதல் 13 வரையிலான தடய பொருட்களை உயிரியல் இராசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்த பட்டதில் 1 முதல் 5 வரை, 9 மற்றும் 12 ஆகிய தடய பொருட்களில் இரத்தம் கண்டறியபட்டது. ஆனால் அயிட்டம் 6, 7, 8, 10, 11 மற்றும் 13 ஆகிய தடய பொருட்களில் இரத்தம் கண்டறியபடவில்லை என்று சான்று வழங்கியுள்ளேன்.

குறிப்பு- மேற்கண்ட இரத்த மாதிரிகளை இரத்தம் இனம் மற்றும் வகையை கண்டறியும் பொருட்டு துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் உயிரியல் பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். இதன் தொடர்ச்சியாக குருதி வடிநீரியல் அறிக்கையின் எண் TAN/SER/63/2019 ஆகும். அயிட்டம் 1, 5 மற்றும் 12 ஆகியவற்றில் உள்ள இரத்தகரை மனித இனம் என்றும், ஆனால் இரத்த வகைகள் கண்டறிய இயலவில்லை அதற்கு காரணம் அந்த இரத்த செல்சுவர்களில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இரத்த வகை கண்டறிய இயலாது மற்றும் அயிட்டம் 2, 3, 4 மற்றும் 9 ஆகிய தடய பொருட்களில் உள்ள இரத்தம் மனித இனம் என்றும் இரத்த வகை A வகையை சார்ந்தது என்று அறிக்கை வழங்கபட்டது. இதன் தொடர்ச்சியாக பேராசிரியர் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவம் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி, தஞ்சாவூர் அவரிடமிருந்து பிண கூறாய்வு எண் 825/2019

வழங்ககூடிய இரத்தமாதிரிகள் ஆய்வகத்தில் பெறபட்டு அதற்கான ஆய்வக எண் TAN/BIOL/94/2019 வழங்கபட்டது. அந்த இரத்த மாதிரிகளை இரத்த வகை கண்டறியும் பொருட்டு துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அனுப்பிவைக்கபட்டது. அவரிடமிருந்து பெறபட்ட குருதி வடிநீரியல் அறிக்கை எண் TAN/SER/51/2019 ஆகும். இந்த இரத்த மாதிரி வகை A வகை என அறிக்கை வழங்கபட்டுள்ளது. பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.15** ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிஸார் எந்த வருடம் என்னை விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. அறிக்கை கொடுத்தது நான் இல்லை என்றால் சரியல்ல. குருதி வடிநீரியல் அறிக்கை யார் கொடுத்தது என்றால் திருச்சி ஆய்வகத்திலிருந்து எங்கள் ஆய்வகத்திற்கு அனுப்பபட்டு நாங்கள் ஆய்வறிக்கை கொடுத்தோம். இறந்துபோன பிரேதம் திறந்தவெளியில் கிடந்து அழுகியிருந்தால் இரத்த வகை மற்றும் இரத்த இனம் கண்டறியமுடியாது. என்னை போலிஸார் விசாரிக்கவில்லை என்றும், இயந்திர தனமாக அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.